**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 54/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திருமதி. சித்ரா |
| Father's Name/Husband Name: | திரு. பெரியசாமி |
| Village : | அத்தியூர் குடிக்காடு |
| Taluk : | குன்னம் |
| Age : | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மாயவேல் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அத்தியூர் குடிக்காடு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். கடந்த ஒன்றரை வருடத்திற்கு முன்பு மதியம் ஒரு மணியளவில் அ.சா.1 என்னுடைய வீட்டிற்கு லோன் சம்மந்தமாக பேசுவதற்கு வந்தார். அ.சா.1 என்னுடைய வீட்டிற்கு வருவதற்கு முன்பாக ஆடுகளை மேய்ச்சலுக்காக விட்டிருந்தார். அங்கு வந்த எதிரி எதற்காக ஆடுகளை எங்களுடைய கொல்லைக்குள் விட்டிருக்கிறாய் என்று சத்தம் போட்டார். எதிரி அவர் வைத்திருந்த தடிக் குச்சியால் அ.சா.1ன் இடது பக்க கழுத்தில் அடித்ததில் மயக்கமடைந்தார். காயம்பட்ட அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். எதிரியை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1ம் நானும் எத்தனை வருடமாக குழுவில் லோன் போட்டு உள்ளோம் என்றால் இரண்டு வருடமாக. காயம்பட்ட அ.சா.1 எங்கு சென்று சிகிச்சை பெற்றார் என்றால் அத்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு ஊசி போட்டுக் கொண்டு பின் திட்டக்குடி மருத்துவமனைக்கு சென்றுவிட்டு அதன்பிறகு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார். எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எப்போது எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடந்த 4-5 நாட்கள் கழித்து என் வீட்டில் வைத்து என்னை விசாரித்தார்கள். எதிரி மாயவேல் அ.சா.1யை திட்டவும் இல்லை என்றாலும் அடிக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. குழு லோனுக்காக அ.சா.1க்கு நானும் எனக்கு அ.சா.1ம் மாறி மாறி கையெழுத்து போட வேண்டியதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.